10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 240 வெள்ளிக்கிழமை ஜனவரி 19 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும்

## மைத்திரியே போட்டி

கொழும்பு, ஜன. 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் 06▶

## அதிர்ச்சித் திருப்பங்கள் லசந்த படுகொலையில்



கொழும்பு, ஜன. 19

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட 2009 ஜனவரி 9ஆம் திகதிக்கு முதல் நாள், அவரின் அலுவலகத்தை மருதானை திரிப்போலி இராணுவ புலனாய்வு முகாமைச் சேர்ந்த இராணுவ புலனாய்வாளர்கள் சிலர் கண்காணித்திருக்கும் அதிர்ச்சித் தகவலை புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

தாம் இதுவரை முன்னெடுத்துள்ள விசாரணைகளில் இது உறுதியாகியுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

மேலும் கொலை இடம்பெற்ற பின் அதை விசாரித்து வந்த கல்கிசை பொலிஸாரும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரும் கொலையாளிக 06▶

## கிளிநொச்சியில் போலி வாக்குச் சீட்டு

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சியின் ஸ்கந்தபுரத்தில் போலி வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மாவட்டத்தின் உதவி ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களே இந்த வாக்குச் சீட்டுக்களை வழங்கியுள்ளனர் என முறையிட்ட அவர், தமது சுயேச்சைக் குழுவின் வெற்றியைப் பறிக்க தமது கேடயம் சின்னத்துக்குப் பதிலாக வேறொரு சின்னத்தை அச்சிட்டு வழங்கியுள்ளனர் என அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்தார்.

" கரைச்சி பிரதேசத்தில் ஒன்பது அர 06▶

## ஐ.தே.கவினருக்கு எதிராக நடவடிக்கை – பிரதமர்

கொழும்பு, ஜன. 19

பிணைமுறி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த விவகாரம் தொடர்பில் வசேட உரையொன்றை நிகழ்த்தும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஆராய 06▶

## சிங்கள மாணவர்கள் நேற்றிரவு மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். பல்கலைக்கழகத்தின் சிங்கள மாணவர்கள் நேற்றிரவு தமக்குள்ளேயே மோதலில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழத்துக்கு அண்மையாக பரமேஸ்வரா சந்தியிலேயே இந்த மோதல் ஏற்பட்டது. மூன்றாம் வருட மாணவர்களின் மோதலின் தொடர்ச்சியாகவே இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. 06▶

## பயங்கரவாதத் தடைச் சட்டம் உடன் நீக்குக!

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து



கொழும்பு, ஜனவரி 19

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை உடன் நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விடயத்திலும் விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும். மேலும் குற்றவியல் நடைமுறைக் கோவையும் திருத்தியமைக்கப்பட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளது ஐரோப்பிய ஒன்றியம்.

ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை இடையிலான இணை ஆணைக்குழுவின் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே ஐரோப்பிய ஒன்றியத்தினர் தமது எதிர்பார்ப்புகளை வலியுறுத்தினர். 2015 ஒக்ரோபர் முதலாம் 06▶

24 பேர் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு

## இராணுவ அதிகாரியை ஆஜராக உத்தரவு

யாழ்ப்பாணம்; ஜன. 19

நாவற்குழியில் 24 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் முதல் எதிரியான மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பட்டி வெலான நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

1996 ஆம் ஆண்டு நாவற்குழி படை முகாமில் இராணுவ அதிகாரியான துமிந்த கெப்பிட்டி 06▶

## கூட்டமைப்பின் ஒரே நோக்கம் சமஷ்டித் தீர்வைப் பெறுவதே

### பக்கப்பாட்டுப் பாடுகிறார் அமைச்சர் தயாசிறி



கொழும்பு, ஜன. 19

வடக்கு-கிழக்கிற்கு சமஷ்டித் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் ஒரே நோக்கத்தை அடிப்படையாக வைத்தே தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கியுள்ளது என்று விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எம்மிடம் கருத்துக் கூறிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

பலர் பல்வேறு நோக்கத்தை அடைவதற்காக இந்தத் தேர்தலைப் பயன்படுத்து 06▶

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்



பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

## தென்மராட்சியில் நாடக விழா

யாழ்ப்பாணம், ஜன.19

காலநிலைச் சீரின்மையால் ஒத்தி வைக்கப்பட்ட தென்மராட்சி இலக்கிய அணியின் நாடகவிழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க் கோட்டம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உப அதிபர் திரு செ. சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வானது சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் ஜெகசீலன் தம்பதியினரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது. கடவுள் வாழ்த்தினை செல்வி.கி.நாமகளும், நாடகமும் மனிதனும் என்ற தொனிப் பொருளில் எழிலுரையை கோப்பாய் தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் க.இ.கமலநாதனும் நிகழ்த்துவர்.

நிகழ்வின் இறுதியில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப் போடு நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் தான் விரும்பாத் தியாகி ஒருவர் என்ற நாடகமும் மற்றும் சாவகச்சேரி சித்தி விநாயகர் கலைமன்றத்தின் தயாரிப்பில் மயானத்தில் மன்னன்" என்ற இசை நாடகமும் அரங்கேறவுள்ளன. இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி இலக்கிய அணியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (அ)

# நீதிக்குத் தோள் கொடுங்கள்

## கனேடியப் பிரதமருக்கு அமைச்சர் அனந்தி பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 19

ஜெனீவா அமர்வில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்ரின்ட் ரூடோ உறுதி தெரிவித்துள்ளமைக்கு நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதாக வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையால் இலங்கை குறித்து எடுக்கப்படும் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு கடுமையான அழுத்தம் கொடுக்கப்படும் என்று, கனடா பிரதமர் ஜஸ்ரின்ட் ரூடோ உறுதிபடத் தெரிவித்தமை தொடர்பில் அறிக்கை வடிவில் அமைச்சர் அனந்தி வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:

இலங்கை அரச படைகளால் தமிழ் மக்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி தொடர்ந்தும் தாமதப்படுத்தப்பட்டு வருவதற்கு, இக் குற்றத்துடன் நேரடியாகத் தொடர்புடைய இலங்கை அரசாங்கம் தனது பொறுப்புக்கூறலை நிறைவேற்றாமையே காரணமாகும்.

போரிற்கு பின்னர் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வினை வழங்குவோம் என்று முன்னைய இலங்கை ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் அடிப்படையில் போருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக நாடுகள் தமது ஆதரவினை வழங்கியிருந்தன. ஆனால், அதன் பின்னர் நடைபெற்ற, நடைபெற்று வரும் இனப்படுகொலைக் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலை செய்வதற்கான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்காது மௌனமாக இருப்பதானது பாதிக்கப்பட்ட தமிழர்களிடையே பெரும் ஏமாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான கையறு நிலையில் நின்று கொண்டு ஈழத்தமிழர்களாகிய நாம் நீதிக்கான முன்னெடுப்புகளை அறத்தின் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையுடன் மேற்கொண்டு வரும் வேளையில் கனடா பிரதமரின் அறிவிப்பானது பெரும் உத்வேகத்தை தந்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் நம்பிக்கையைக் கொண்டிருக்கக்கூடிய பொறுப்புக் கூறல் பொறிமுறை தேவையென்ற விடயத்தில் தனிப்பட்ட முறையில் தாம் உறுதியாக இருப்பதாக கனடா பிரதமர் கூறியிருப்பதன் மூலம் இவ்விடயத்தில் தனது உள்ளார்ந்தமான ஈடுபாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.

இதே உறுதியுடன், ஈழத் தமிழர்களின் நீதிக்கான முன்னெடுப்புகளில் தோளோடு தோள் நின்று கனடா அரசாங்கம் தொடர்ந்தும் பலம் சேர்க்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெட்கம், ரோசம் இருந்தால் ரணில் பதவி விலகட்டும்

கொழும்பு,ஜன.19

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெட்கம்,ரோசம் இருந்தால் பிணை முறி மோசடிக்காக இனியாவது அவர் பதவி விலக வேண்டும்.இந்த மோசடியுடன் தொடர்புடைய அத்தனை பேரினதும் கடவுச் சீட்டுக்களும் வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட வேண்டும்.ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அது மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். மத்திய வங்கி இழந்த தொகையை பேர் பேச்சுவல் நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்
கொள்ள வேண்டும். மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்."

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் கோப் குழுத் தலைவருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.பிணை முறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கருத்துக் கூறிய போதே இவ்வாறு கூறினார்.

பிணை முறி தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கை கோப் குழுவின் அறிக்கையை மெய்ப்படுத்தியுள்ளது. அந்த அறிக்கையை நாம் இன்னும் பார்க்காத போதிலும் அது தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட கூற்றின் அடிப்படையில் இந்த உண்மையை விளங்கிக்கொள்ள முடிகிறது.

குறிப்பாக,அர்ஜூன மஹேந்திரன் இந்த மோசடியுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார் என்றும் அவரது மருமகன் அலோசியஸின் நிறுவனம் அசாதாரண முறையில் அதிக இலாபம் பெற்றுள்ளது என்றும் நாம் கோப் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம்.

இலக்கத்தால் கணக்கிட முடியாத அளவுக்கு நாட்டுக்கு அதிக நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் வங்கி வட்டி வீதம் அதிகரித்துள்ளது என்றும் அரசுக்கு அதிக நட்டம் ஏற்பட்டுள்ளதால் முழு நாட்டின் பொருளாதாரத்தையும் பாதித்துள்ளது என்றும் நாம் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம்.


அன்று வங்கி வட்டி வீதம் 9 வீதமாக இருந்தபோது வங்கிகளில் கடனைப் பெற்றவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தும் போது 15 வீத வட்டியைச் செலுத்த வேண்டும். இதனால் வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளினதும் நகைகளை அடகு வைத்த ஏழைத் தாய்மார்களினதும் வயிற்றில் அடி வீழ்ந்துள்ளது.

கோப் அறிக்கையின் ஊடாகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஊடாகவும் இந்த ஊழல் வெளிப்படுத்தப்படவில்லையென்றால் தொடர்ச்சியாக 35 வருடங்களுக்கு இந்த ஊழல் இடம்பெற்றுக்கொண்டே இருக்கும் வட்டி வீதம் அதிகரித்துக்கொண்டே செல்லும். என்ன நடக்குது என்று எமக்குத் தெரியாமலேயே போகும்.வேறு நாடுகளில் இது நடந்திருந்தால் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி விலகி இருப்பார். 35 வருடங்களுக்கு பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையில் இடம்பெற்றிருக்கும் இந்த ஊழல் தொடர்பில் இதனுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் என்ற வகையில் பிரதமர் என்ன பதிலளிக்கப் போகிறார்?



பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வெட்கம்,ரோசம் இருந்தால் பிணை முறி மோசடிக்காக இனியாவது அவர் பதவி விலக வேண்டும்" என்றார் சுனில் ஹந்துன் நெத்தி.







## எம்.ஜீ.ஆரின் பிறந்தநாளில் மாணவர்களுக்கு பரிசில்கள்

வடமராட்சி, ஜன.19

எம்.ஜீ.ஆரின் 101 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு, வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி எம்.ஜீ.ஆர் நற்பணி மன்றத்தில், சாதனைபடைத்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பதக்கமும் அணிவித்து கௌரப்புச் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் கலந்து சிறப்பித்தார். (அ-11)

## தற்காலிக அடையாள அட்டையைப் பெறலாம்



வவுனியா ,ஜன.19

"உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க தற்காலிக அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்" என வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் டி.சி.அரவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்களின்போது வாக்களிப்பதற்காக ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் அத்தியாவசியமானதாகும். இதற்காக தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதியர் அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, மதகுருமார் அடையாள அட்டை, தேர்தல் ஆணைக் குழுவால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை என்பவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்த முடியும்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய மேற் சொன்ன ஆவணங்கள் இல்லாதவர்கள் கிராம அலுவலர் ஊடாகாக தேர்தல் ஆணைக்குழுவின் தற்காலிக அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும். எனவே தேவைப்படுவோர் தமது பகுதி கிராம அலுவலர் ஊடாக அதனைப் பெறுவதன் மூலம் வாக்களிக்க முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

எதிரொலி Ethiroli
வெள்ளி, 19 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

# பிணந் தின்னிக் கழுகுகள்

நேற்றோர் பெருஞ்சாவு. 22 வயது இளைஞன் ஒருவனை, 2 வருடப் போராட்டத்தின் பின் புற்றுநோய் நேற்றுக் குடித்து முடித்திருந்தது. கண்களை அரைவாசி திறந்திருக்க, அவன் உடல் சூடு தணிந்து கொண்டிருந்தது. சுற்றிவர கண்ணீரோடும், வாய்க்குள் வெடிக்கும் அழுகையின் பேரொலியைக் கட்டுப்படுத்திக் கொண்டும் சுற்றிலும் உறவுகள்.

அடுத்து நிகழ வேண்டியவை பற்றிய சிந்தித்தலையும், செயலையும் சாவின் அதிர்வு உறையச் செய்திருந்தது. யாருக்கும் எதுவும் செய்யத் தோன்றவில்லை. 22 வயதில் அவனைப் பறிகொடுத்த வலி, வழியும் கண்ணீரோடு எங்காவது வெறித்துப் பார்த்தபடி அப்படியே இருக்கச் சொன்னது. ஒரிருவர் மட்டும் சவப்பெட்டி முதலான அடுத்த கட்டம் பற்றி விசாரிக்கப் புறப்பட்டார்கள். இன்னும் இரு மணித்தியாலங்களில் சடலத்தை மருத்துவமனையில் இருந்து அவர்கள் அப்புறப்படுத்த வேண்டும்.

எங்கு பெட்டி எடுப்பது? எப்படி அவனை வேறு உடை மாற்றி வீட்டுக்குக் கொண்டு வருவது? ஏதேனும் அந்தியகால சேவைக் கடைகளில் கொடுத்துச்செய்ய வேண்டுமா? இல்லாவிடில் வைத்தியசாலையிலேயே செய்யலாமா? யாரைக் கேட்பார்கள்? யாரிடம் போவார்கள்? அப்போது ஒருவர் வந்தார்.

"ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. நான் இங்க காம்பிராவுக்க தான் வேலை செய்யிறன். பெட்டி, கார் எல்லாம் நான் பிடிச்சுத் தாறன். நீங்கள் உடுப்பை மட்டும் வாங்கியாங்கோ. மிச்சமெல்லாம் என்ர பொறுப்பு" என்றார் அந்த ஆபத்பாந்தவன். அவர்களை எதுவும் கேட்கரமல் கார்க்காரனுக்கும், சவப்பெட்டிக்கடைக்கும் போன் செய்து எல்லாம் ஒழுங்கு செய்து விட்டார்.

"பெட்டி 35 ஆயிரம். நான் வந்தால் ஒரு 2 ஆயிரம் குறைப்பாங்கள். காருக்கு 8 ஆயிரம். தெல்லிப்பழையில இருந்து வடமராட்சிக்கு போக அப்பிடித்தான் கேப்பாங்கள். வாங்கோ பெட்டியைப் பாத்து காசைக் குடுத்திட்டு வருவம்" அவர்களில் இருவரை அழைத்துக் கொண்டு ஆபத்பாந்தவன் முன்னே நடக்கத் தொடங்கினார்.

கடைக்காரர் சவப்பெட்டியின் பெருமைகளை அடுக்கத் தொடங்கினார். அப்படித் திறக்கலாம், இப்படி மூடலாம், உள்ளே இருக்கும் பஞ்சணையின் இதம் என்று. எதுவுமே ஏறவில்லை. கடைக்காரனோடு பேசி விட்டு, ஆபத்பாந்தவன் வந்தார்.

"அவன் குறைக்கிறான் இல்லை. நீங்கள் காசைத் தாங்கோ. குடுக் கேக்க ஒரு 2 ஆயிரத்தை குறைச்சுக் குடுத்தா வாங்கிடுவான்" என்றார்.

எப்படியாவது அங்கிருந்து சடலத்தைக் கொண்டு போய்விட வேண்டும். கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கவோ, பேரம் பேசிக் கொண்டிருக்கவோ இழப்பின் மனது இடம் தரவில்லை.

காசை எடுத்து எண்ணிக் கொண்டிருக்கும் போது, இன்னொருவர் வந்தார். அவர் அந்த இளைஞனின் உயிர் போனவுடன் சவப்பெட்டி பற்றி விசாரிக்கச் சென்றவர்வகளில் ஒருவர்.

"என்ன மாதிரி, எல்லாம் சரியோ?" என்று கேட்டார்.

"அதெல்லாம் பிரச்சனையில்லை. காம்பிறாவில வேலை செய்யிற ஒராள் கெல்ப் பண்ணினவர். கார், பெட்டி எல்லாம் ஒழுங்கு பண்ணிட்டார். இனி வெளிக்கிடுத்தி கொண்டு போறதுதான் மிச்சம்"

"பெட்டி எவ்வளவாம்?"

"முப்பத்தைஞ்சு"

அவ்வளவுதான். கையில் இருந்த காசை அவர் பிடுங்கினார்.

"நான் பெட்டியை எடுத்துக் கொண்டு வாறன். நீ காம்பிறாவில வேலை செய்யிறவரைக் கூட்டிக் கொண்டு போய் கனுவை (இறந்தவரை) குளிப்பாட்டி வெளிக்கிடுத்து" என்றார்.

மற்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆபத்பாந்தவனுக்கும்தான். பவுடரும், செண்ட் போத்தலும்வாங்கிக் கொண்டு இறந்தவரைக் குளிப்பாட்டி, கோட், சூட் போட்டு முடித்தபோது, பெட்டியோடு கார் காம்பிராவுக்கு பக்கத்தில் வந்து நின்றிருந்தது.

ஆபத்பாந்தவன் தலையைச் சொறிந்தார்.

"எனக்கு ஏதும் சந்தோசமாத் தந்திட்டு போங்கோ"

சந்தோசமா? ஒருவரின் சாவிலா? சரி, ஒரு சடலத்தை அருவெருப்பின்றி சுத்தம் செய்தவர், பெட்டிக்கும் காருக்கும் ஒழுங்கு செய்தவர். கொடுத்தால் ஒன்றும் குறையப் போவதில்லை. ஆயிரம் கொடுத்தார்கள். நாலாயிரம் கேட்டார். இன்னும் ஒரு ஆயிரத்தைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்கள்

அப்போதுதான் சவப்பெட்டிக் கடையில் காசைப் பிடுங்கியவர் வந்து மிச்சக் காசை அவர்கள் கையில் வைத்தார். "நான் முதல் வந்து விசாரிக்கேக்க அந்தப் பெட்டி 20 ஆயிரம் சொன்னவை. காருக்கும் 4 ஆயிரம் தான். உந்தக் காம்பிறாக்காரன் பெட்டியில 15 ஆயிரம் வைச்சு சொல்லி இருக்கிறான். பெடியன் செத்த பதகளிப்பில நாங்கள் கேட்டதைக் குடுப்பமெண்டு தெரியும். எல்லாரிட்டையும் இப்பிடித்தான் அடிக்கிறான் போல"

அவர் சொல்லச் சொல்ல, ஆபத்பாந்தவன், ஆபத்தான பாந்தவனாக மாறிக்கொண்டிருந்தான். இந்தச் சம்பவம் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நடந்தது. இதே போன்றுதான் எல்லா வைத்தியசாலைகளிலும் மரணத்தை வைத்து, மனிதத்தைப் புதைத்துவிட்டு, வியாபாரம் செய்யும் கும்பல்கள் அலைகின்றன. இனிக்கும் வார்த்தைகளோடு,சாவின் கணங்களின் கண்ணீரோடு நிற்பவர்களிடம் காசு பிடுங்குவதைக் குறியாகக் கொண்ட இவர்களுக்கும், பிணந்தின்னிக் கழுகுகளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கப் போகின்றது?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## உருவப்படம் எரிப்பு

முல்லைத்தீவு, ஜன. 19

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உருவப்படம் தாங்கிய விளம்பர பதாதை அடையாளம் தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு 9 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள வேட்பாளரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

## கொள்ளையிட்டுப் பதுங்கியோர் வசமாக மாட்டினர் பொலிஸிடம்

சாவகச்சேரி, ஜன.19

துப்பாக்கி முனையில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவரை தாம் கைது செய்துள்ளனர் எனக் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையர்கள் பதுங்கியிருக்கும் இடம் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் - புத்தூர் சந்தியில் பழுதடைந்து நின்ற காரில் இருந்த தம்பதியரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி 5 இலட்சம் ரூபாவையும் 6 பவுண் நகைகளையும் பறித்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அவர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வீடு ஒன்றுக்குள் மறைந்திருந்த இருவரையும் நேற்றுப் பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவர்களில் ஒருவர் கஞ்சா கடத்தல் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர் என்று கூறப்படுகின்றது.

கைதானவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## போர்க்குற்ற ஆபத்து மைத்திரியால் விலகியது

### அமைச்சர் புகழாரம்



கொழும்பு, ஜன.19

படையினரையும் மகிந்த ராஜபக்சவையும் சர்வதேசப் போர்க்குற்ற நீதிமன்றம் முன் நிறுத்தும்-மின்சாரக் கதிரையில் அமர்த்தும் ஆபத்து மகிந்தவின் ஆட்சியில் நிலவியது. அது இப்போது முற்றாக நீங்கிவிட்டது அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் ஆட்சியில் அதிகமான பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுத்தோம். அவற்றுள் முக்கியமானதுதான் ஜெனீவா மாநாடு. அந்த மாநாடு நெருங்கினால் அதைச் சமாளிக்க முடியாமல் திணறுவோம். அந்த மாநாட்டில் கொண்டு வரப்படும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை வெற்றிகொள்வதற்காக பல நாடுகளுக்குச் சென்று ஆதரவு திரட்டுவோம்.

மகிந்தவின் ஆட்சியில் இந்தப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்து நின்றன. இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலகை வென்றுவிட்டார். உலக நாடுகளின் முழு ஆதரவையும் பெற்றுவிட்டார்.

படையினரை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றம் முன் நிறுத்தும்-மின்சாரக் கதிரையில் அமர்த்தும் ஆபத்து மகிந்தவின் ஆட்சியில் இருந்தது. படையினரும் அவர்களின் உறவினர்களும் பயத்தில் இருந்தனர். இப்போது அந்த ஆபத்தும்பயமும் முற்றாக நீங்கிவிட்டன.

அப்படியான ஒரு யுகம் இலகுவில் உருவாகாது. இன்று சீனாவும், இந்தியாவும் எமக்கு ஆதரவாக உள்ளன. அதேபோல், அமெரிக்காவும் ரஷ்யாவும் எமக்கு ஆதரவாக உள்ளன. அத்தோடு மத்திய கிழக்கு நாடு கள் அனைத்தும் எம்முடனேயே இணைந்துள்ளன. அதுமாத்திரமன்றி, சர்வதேச மட்டத்தில் பொருளாதார வெற்றிகள் பலவற்றையும் எம்மால் அடையமுடிந்தது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான மீன் ஏற்றுமதித் தடை மற்றும் ஜீ எஸ் பி பிளஸ் தடை போன்றவற்றையும் எம்மால் நீக்க முடிந்தது. இது எமக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## நிர்வாணப் படங்கள் பதிவேற்றியவர் கைது

கொழும்பு, ஜன. 19

சாதாரண பெண்களின் முகங்களை நிர்வாணப் பெண்களின் உடல்களுடன் பொருத்தி, அவற்றை சமூக வலைதளங்களில் பல வருட காலமாகப் பதிவேற்றி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

படங்களைக் காட்டிப் பயமுறுத்தி பணம், நகை, பாலுறவு என்பனவற்றை இவர் பெற்று வந்தார் எனக் கூறப்படுகிறது.


கொஸ்வத்த, ராஜகிரிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து இந்த 35 வயதுடையவரே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைதானவரின் கைபேசி, ஒளிப்படங்கள் பதிவேற்றும் சமூக வலைதளக் கணக்குகளை பொலிஸார் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸார் நடத்தி வருகின்றனர். (ச)

## எக்னலிகொடவை கண்டறிய ஒத்துழைப்புக் கொடுங்கள்

### இராணுவத் தளபதியிடம் கோரிக்கை



கொழும்பு,ஜன.19

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான விசாரணைகளுக்கு உதவுமாறு அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவிடம், கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத் தளபதியைச் சந்தித்து அவர், எழுத்துமூலமாக இந்தக் கோரிக்கையைக் கையளித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு பிரகீத் எக்னெலிகொட காணாமல் போய், 8 ஆண்டுகளாகியும், அவரது நிலையைக் கண்டறிவதற்கான முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பாதுகாப்புப் படையினர் ஒழுக்கமானவர்கள் என்று மதிக்கிறேன். ஒரு சில நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த படைகளினதும், மதிப்பு பாழடிக்கப்படக் கூடாது, எனவே, பிரகீத் என்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறியும் விசாரணைகளுக்கு இராணுவத் தளபதி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று அவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இராணுவத் தளபதி, எந்தவொரு விசாரணைகளுக்கும் இராணுவம் பக்கசார்பின்றி நிச்சயமாக ஒத்துழைப்பு வழங்கும் . இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் தவறு செய்திருந்தால், அவர் உயர்நிலையில் இருந்தாலும், கீழ் நிலையில் இருந்தாலும், தண்டிக்கப்படுவார். குண்டர்களின் இராணுவத்தை என்னால் வழிநடத்த முடியாது" என்று கூறியுள்ளார். (அ)

## இன்று நாளும் கோளும்


19.01.2018 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 06 ஆம் நாள்
துவிதியை மு.ப. 11.57 மணி வரை அவிட்டம் 02.58 வரை சித்தயோகம்
இராகுகாலம் 10.30 - 12.00 சுபநேரம் மு.ப. 09.30 - 10.30 எமகண்டம் மு.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புகழ் | ஆர்வம் | மேன்மை | போட்டி | அனுகூலம் | பக்தி | சிரமம் | விவேகம் | கவனம் | பாராட்டு | சிக்கல் | தோல்வி |

# மைத்திரியும் மகிந்தவும் இணைவதை ஐ.தே.க. எதிர்க்காது

## அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ உறுதிமொழி

**(சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ வழங்கிய பேட்டியின் தமிழ் மொழியாக்கம் இங்கு தரப்படுகின்றது.)**



கேள்வி: எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்தால் உங்கள் கட்சி அரசை விட்டு விலகுமா?

பதில்: நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். இது கிராம மட்டத்திலான தேர்தல். கிராமங்களில் நாம் பெரும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். மேலும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியுள்ளது. எமது சேவையை அங்கீகரித்துள்ள-இச் சேவை மேலும் தொடர வேண்டும் என்று விரும்புகின்ற மக்கள் நிச்சயம் எம்மை வெற்றிபெறச் செய்வார்கள். நாம் ஒருவேளை தோல்வியடைந்தால் அப்போது என்ன செய்வது என்று முடிவெடுப்போம். ஆட்சியில் இருந்து விலகுவதா இல்லையா என்று என்னால் எதுவும் சொல்ல முடியாது. அது தொடர்பில் கூறுவதற்கு நான் கட்சித் தலைவர் அல்ல.

கே: ஜனவரி எட்டாம் திகதிக்கு முன் உங்களுடன் இருந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், தொழிற் சங்கத்தினர் மற்றும் பௌத்த தேரர்கள் எனப் பலர் இப்போது உங்களுடன். இல்லை. இந்த நிலையில் உங்களால் எப்படித் தேர்தலை வெற்றிகொள்ள முடியும்?

ப: நாம் தேர்தலுக்கு முகம் கொடுத்துப் பார்ப்போம். அரசில் சில பிழைகள் இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் ஒருபோதும் அரசைப் பாதுகாக்கும் நோக்கில்-அரசின் பிழைகளை நியாயப்படுத்தும் நோக்கில்- பேசமாட்டேன். நிகழ்க்கின்ற பிழைகளைத் திருத்திக்கொண்டு நாம் பயணிப்போம்.

நாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் 2020 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் நிறைவேற்றுவோம். அவற்றை நிறைவேற்றிய பின்பே நாம் தேர்தலுக்கு முகம் கொடுப்போம்.

கே:தேசிய அரசுக்கான ஒப்பந்தம் இந்த மாதம் 31ஆம் திகதி முடிவடைந்துள்ளது. இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுமா?

ப: எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேர்மையானவர். தேர்தலில் தோற்றாலும் வென்றாலும் தேசிய அரசையே அமைப்போம் என்று கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்குறுதி வழங்கினார். அதன் அடிப்படையில் தேசிய அரசும் அமைக்கப்பட்டது. தேர்தலில் தோல்வியடைந்தவர்களையும் இணைத்துக்கொண்டே நாம் இந்த அரசை உருவாக்கினோம். இந்த இணைவால் ஐக்கிய தேசிய கட்சியில் தெரிவான இளம் எம்பிக்களுக்கு கிடைக்க வேண்டிய பொருத்தமான இடம்-சலுகைகள்- கிடைக்கவில்லை. இதனால் மக்கள் அதிருப்தியடையவும் செய்தனர். கட்சிக்கு பின்னடைவும் ஏற்பட்டது.

இருந்தாலும் நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றைக் கொண்டு வருவதற்காகவும் நாட்டுக்கான சில முக்கிய பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் நாம் தேசிய அரசை உருவாக்கினோம். அதன் அடிப்படையில் பல மாற்றங்களை ஏற்படுத்தினோம். ஐக்கிய தேசிய கட்சியால் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலை இல்லை. நினைத்தால் முடியும். ஆனால், நாட்டின் நலன் கருதி அதை நாம் செய்யவில்லை.

கே: கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை இறக்குமதி செய்துள்ளது. 2020 தேர்தலிலும் அதே நிலைதானா?

ப: இல்லை. 2010 இல் சரத் போன்சேகா நிறுத்தப்பட்டார். யுத்த வெற்றியுடன் இணைந்த அப்போதைய அரசியல் சூழ்நிலையே அவ்வாறு முடிவெடுக்க வைத்தது. 2015 இல் மைத்திரிபால சிறிசேனவை நிறுத்தினோம். அப்போது இருந்த அரசியல் சூழ்நிலைக்கு அவர் தேவைப்பட்டார்.

ஆனால்,2020 ஐக்கிய தேசிய கட்சியே நேரடியாக களத்தில் இறங்கும். இருக்கின்ற காலத்துக்குள் நாம் பல மாற்றங்களை மேற்கொள்வோம். அதனூடாக ஜனாதிபதித் தேர்தலில் நாம் வெற்றிபெறுவதற்கான நிலைமை உருவாக்கப்படும். மூன்றாவது முறையும் பொது வேட்பாளரின் தேவை எமக்கு இல்லை.

கே:தான் ஒருபோதும் மகிந்தவுடன் கூட்டுச் சேரமாட்டேன் என்று மைத்திரி ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்களிடம் வாக்குறுதி வழங்கியுள்ளார் என்று அறிகிறோம். அது உண்மையா?

ப: அப்படி உறுதியளிக்கவில்லை. ஆனால், அவரை ஜனாதிபதியாக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சி எவ்வளவு தூரம் உழைத்தது என்பதை அவர் அறிவார். மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைத்துள்ளபோதிலும் மாகாண சபைகளில் சுதந்திரக் கட்சியின் ஆட்சியே உண்டு.

மாகாண சபைகளில் எமது கட்சி உறுப்பினர்களுக்கு சில பிரச்சினைகள் உண்டு. அவர்கள் அதிருப்தியில் உள்ளனர். அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக மைத்திரி தான் ஒருபோதும் ஐக்கிய தேசிய கட்சிக்கு அநியாயம் செய்யமாட்டேன் என்று உறுதியளித்துள்ளார்.

கே:ஆனால், வேட்பு மனுத்தாக்கல் செய்யும் இறுதிக் கட்டம் வரை மைத்திரியையும் மகிந்தவையும் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்றனவே?

ப: அதில் பிழை இல்லை. அது அவர்களின் உட்கட்சிப் பிரச்சினை. சஜித் பிரேமதாஸவும் ரணில் விக்கிரமசிங்கவும் பிளவுபட்டு நின்றபோது அவர்களை ஒன்றிணைப்பதற்கு கட்சிக்குள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுபோல்தான் இதுவும்.

அவர்கள் ஒன்றிணைந்தால் எமக்குப் பிரச்சினை எதுவும் கிடையாது. இதனால் நாம் தனி வழி செல்ல நேர்ந்தாலும் அதற்கும் நாம் தயார்.
இவர்களில் நாம் தங்கி இல்லை. 2020க்குப் பிறகு எப்படியும் நாம் தனி வழியில்தான் செல்வோம்.

**மொழியாக்கம்: எஸ்.சுரேஷ்**

## அந்தநாள் ஞாபகம்



**19.01.2007**

இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வாகரையைத் தாம் கைப்பற்றிவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

## கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு ஞாயிறு

யாழ்ப்பாணம், ஜன. 19

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறையின் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராஜநாயகமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

1965இல் ஆரம்பிக்கப்பட்ட திருமறைக் கலாமன்றம் 1988ஆம் ஆண்டு முதல் கலைசார் பயிற்சிகளை ஆரம்பித்தது. தொட்க்கத்தில் நாடகமும் அரங்கியலும், ஓவியம் சார்ந்த பயிற்சிகள் நடத்தப்பட்டு வந்த நிலையில் 1990ஆம் ஆண்டு ஏனைய கலைசார் பயிற்சிகளையும் வழங்கும் முகமாக 'கவின் கலைகள் பயிலகம்' ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2006ஆம் ஆண்டு முதல் மேலும் தரமுயர்த்தப்பட்டு தனக்கான சொந்தக் கட்டடத்தில் 'கலைத்தூது அழகியல் கல்லூரி'யாக இயங்க ஆரம்பப்பித்தது. கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் இடம் பெறுகின்ற 9ஆவது பரிசளிப்பு விழா இதுவாகும். (அ)

## முல்லைத்தீவில் 30 முறைப்பாடுகள்

முல்லைத்தீவு, ஜன.19

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் இதுவரை முப்பது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று , துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் பல்வேறு கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் 18 ஆம் திகதி வரையான காலத்தில் முப்பது தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மக்கள் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் 0213204352 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்" என முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ)

# வடக்கு, கிழக்கில் மாற்றம் வரும்

## டக்ளஸ் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன.19

உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது வடக்கு, கிழக்கில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும் தேர்தலாகவே அமையும் என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பாரம்பரிய தலைமைகளிலிருந்து மாறி யதார்த்தவாதிகளிடம் தமது அரசியல் தலைமைத்துவத்தை ஒப்படைப்பார்கள் என்றே நான் நம்புகின்றேன்.


பாரம்பரியக் கொள்கைகளுடன் இருக்கும் கட்சிகள் ஏமாற்றுக் கட்சிகள் என்று மக்கள் இன்று அறிந்துகொண்டுள்ளனர். அந்தவகையில் இனிவருங்காலங்களில் தாம் எதிர்க்கட்சி என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றி ஆளும் கட்சியில் இருக்கும் தரப்பினரது சுயநலத் தன்மைகளை மக்கள் புரிந்துள்ளனர்.

பல·நாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவான் என்பதற்கு அமைவாக இன்று அவர்களது உண்மை முகங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. அவர்களது கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் மக்கள் நலன் சார்ந்ததாக இல்லை. இன்று மக்களிடம் முகமூடிக் கொள்ளையர்களாக அவர்கள் வாக்குகளைக் கேட்கத் தயாராகியுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல கொலைகள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்ற உண்மை நிலைமைகள் தற்போது வெளிக்கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இதில் யார் குற்றவாளிகள் என்பதை வரலாறு நிரூபித்துவருகின்றது . எம்மிடம் நம்பிக்கை



மட்டுமன்றி யதார்த்தமான வழிமுறைத் தீர்வுத்திட்டமும் இருக்கிறது. அது இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதிலிருந்து ஆரம்பித்து அதிலிருந்து கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)



# பாகிஸ்தான் தளபதியைச் சந்தித்தார் மைத்திரி



கொழும்பு, ஜன.19

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ஜாவிட் பஜ்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரை தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு வந்த பாகிஸ்தான் இராணுவத் தளபதி , நேற்றுக்காலை அவர், ஜனாதிபதி செயலகத்தில் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, இலங்கைக்கு அவசரத் தேவைகளின் போது பாகிஸ்தான் உரிய நேரத்தில் அளித்து வரும் உதவிகளுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார். (அ)

இ.போ.ச. – தனியார் பஸ்

# நடத்துநர்கள் கைகலப்பு

சாவகச்சேரி, ஜன. 19

இ.போ.ச. - தனியார் பஸ்களின் நடத்துநர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் முடிந்தது.

நேற்று வியாழக்கிழமை 11 மணியளவில் சாவகச்சேரியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது:

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த இ.போ.ச. பஸ்ஸூம், யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸூம் சாவகச்சேரியில் சந்தித்தன.

எதிரெதிரே சந்தித்த இரு பஸ்களும் மோதுவது போல் விலகிச் சென்றன. இதனாலேயே இரு பஸ்ஸின் நடத்துநர்களிடையேயும் தகராறு ஏற்பட்டு, அது கைகலப்பில் முடிந்தது.

இச்சம்பவம் தொடர்பில் இரு நடத்துநர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற பொலிஸார் அறிவுரை கூறியதுடன் இருவரையும் கடுமையாக எச்சரித்து விடுவித்தனர். (ச)

# " நடுவில கொஞ்சப் பக்கத்தைக் காணோம்"

கொழும்பு, ஜன.19

பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை ஆயிரத்து 257 பக்கங்களை கொண்டது என ஜனாதிபதி கூறியிருந்த போதிலும் அதில் ஆயிரத்து 154 பக்கங்களே இருப்பதாகவும் 103 பக்கங்களைக் காணவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

"கடந்த 3 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் ஆயிரத்து 257 பக்கங்கள் இருப்பதாக கூறினார். எனினும் நேற்று நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் ஆயிரத்து 154 பக்கங்கள் மாத்திரமே உள்ளன. 103 பக்கங்கள் இல்லை.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தனக்கு கிடைத்ததாகவும் அதில் பொய்யான விடயங்கள் இருப்பதால் பகிரங்கப்படுத்த முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கூறியுள்ளார்.

இதனால், ரவி கருணாநாயக்க பொய் எனக் கூறும் விடயங்கள் அறிக்கையில் இருந்து நீக்கப்பட்டதால், 103 பக்கங்கள் குறைந்துள்ளதோ என்ற நியாயமான சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், அறிக்கை தொடர்பில் மக்களின் நம்பிக்கை கட்டியெழுப்ப ஜனாதிபதி அந்த 103 பக்கங்களுக்கு என்ன நடந்தது என்பதை நாட்டுக்கு கூற வேண்டும்" எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (அ)

சல்மான் எம்.பி

# பதவி விலகினார்

கொழும்பு,ஜன.19

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். சல்மான், தன்னுடைய எம்.பி பதவியை நேற்று மாலை இராஜினாமாச் செய்துள்ளார்.

தன்னுடைய இராஜினாமா கடிதத்தை அவர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.எனினும் பதவி விலகலுக்கான காரணத்தை அவர் வெளியிடவில்லை. (அ)

பிணைமுறி மோசடி விவகாரம்

# ஒப்ரேஷன்-2 விரைவில்...



கொழும்பு, ஜன. 19

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பான தனது இரண்டாம்கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவில் நேற்றுமுன்தினம் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முதற்கட்டமாக பிணைமுறி மோசடி குறித்த ஆணைக்குழுவை அமைத்து, அறிக்கையைப் பெற்றுள்ளதாகவும், இரண்டாவது கட்டமாக அறிக்கையின் அடிப்படையில், சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக அதனை சட்டமா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

பிணைமுறி மோசடி விவகாரத்தால் கூட்டு அரசாங்கத்துக்குள் விரிசல்கள் எழுந்துள்ள சூழலிலேயே இரண்டாவது கட்ட நடவடிக்கையை தாம் ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச)

# ஐ.டி.எம் நெல்லியடி கம்பஸ் மாணவர்களின் முன் மாதிரி



வடமராட்சி, ஜன.19

ஐ.டி.எம் நெல்லியடி கம்பஸின் ஒரு வருடப் பூர்த்தியினை முன்னிட்டு அந்த நிறுவன மாணவர்களின் நடைபவனியால், திரட்டப்பட்ட நிதியின் மூலம் மந்திகை ஆதார வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவுக்கான அலுவலக மேசை ஒன்று நேற்று வழங்கப்பட்டது.

இதன் போது மாணவர்களை வாழ்த்திய வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர், 'இளம் சமூகத்தின் இம்மாதிரியான சமூக பொறுப்பு சார் செயற்பாடுகள் பெரிதும் வரவேற்கத்தக்கதே! எமது சமூகத்திற்கு எல்லா வித உதவிகளும் அரசே வழ்ங்க வேண்டும் என்று காத்திராது நாமும் சமூக அக்கறையுடன் செயற்படல் வேண்டிய அவசியத்தினை இந்த மாணவர்கள் உணர்த்தியுள்ளனர். இது மகிழ்ச்சி கொள்ள வைக்கின்றது' என்றார். (அ)

# துன்பத்தின் தொடக்கமோ? துறவி அரசியல்

காலம் கலிகாலம் எண்டு சொன்னது சரியாத்தான் போய்க் கொண்டிருக்கு. எல்லாத்தையும் துறந்திட்டம் எண்ட பிறகு ஏன் ஆசையை மட்டும் உவையளாலை துறக்கேலாமல் கிடக்கு. நான் ஆரைச் சொல்லுறன் எண்டால் உந்த எலக்ஸன் கேக்கிற துறவியைத்தான் சொல்லுறன். இந்த முறை எலக்ஸனுக்கு நிண்டவன், கண்டவன் எல்லாம் காசு கட்டியிருக் கிறாங்கள். அப்பிடியானவை காசு கட்டிறதும், ஆக்கள் அவைக்கு வோட்டுப் போடுறதும் அவை அவையின்ரை பிரச்சினை. ஆனால் அவை வந்து சீற்றிலை இருந்து கொண்டு தேவைலயில்லாத வேலையள் பாக்கிறதுதான் எங்களுக்குப் பிரச்சினை.

பார்லிமென்டிலைக் காட்டிலும் உள்ளூராட்சிச் சபையளிலைதான் பிரச்சினையள் கூட. சனத்தின்ரை அடிப்படைப் பிரச்சினையள் எல்லாம் ஊராட்சிக்குள்ளைதானே கிடக்கு.

எல்லாரும் கட்டினமெண்டு கல்முனையிலையும் ஒரு புத்த பிக்கு காசு கட்டியிருக்கிறார். ஏன் கல்முனையிலை உவரைவிட வேறை ஆக்கள் இல்லையோ எண்டு கேட்டதுக்கு, "கல்முனையிலை மக்களுக்காகச் செய்ய வேண்டிய அபிவிருத்தியள் கனக்கக் கிடக்கு எண்டு கண்ணாலை பாக்கத் தெரியிது. அதாலை வோட்டைப் போட்டு என்னை .அனுப்புங்கோ நான் உங்கடை பிரச்சினையள் எல்லாத்தையும் தீர்க்கப் போறன். அம்பாறையிலை எத்தினை பிரச்சினையளைத் தீர்த்துப் போட்டம். அது மாதிரிக் கல்முனையிலையும் தீர்க்க வேணுமெல்லே." எண்டு சொல்லியிருக்கிறார்.

ஆனால் முதலி சொல்லுறான் முந்தி அம்பாறை ஒரு தமிழ் பிரதேசம். இப்ப அங்கை தமிழரைப் பாக்க வேணுமெண்டால் மட்டக்களப்புக்குத்தான் வரவேணும். அதுதான் பிக்கு செய்த சேவையோ தெரியாது. – எண்டு.

முன்னந்தான் துறவி எண்டால் பிச்சைக்காரர் எண்டு நினைக்கிறனாங்கள். இப்ப அவையிட்டைத் தான் காசு. அவை வைச்சிருக்கிற லப்ரொப்பும், ஐ – போனும் உங்களிட்டையும் இல்லை. எங்களிட்டையும் இல்லை

அவர் நிக்கிற வேகத்தைப் பாத்தால் கல்முனையிலை கப்பல் ஓடப்போகுது போலை கிடக்கு. "உண்மையாச் சேவைக்காகத்தான் எலக்ஸன் கேக்கிறியளோ" – எண்டு ஆரோ கேட்டவங்கள் போலை கிடக்கு அதுக்குத்தான் தேரர் சொன்னவராம், நான் என்ரை சுயநலத்துக்காக ஒண்டும் கேக்கேல்லை. என்ரை பிரதேச மக்களுக்கு எத்தினை பிரச்சினையள் இருக்கு? அவயளைப் பாக்கப் பாவமாக்கிடக்கு. அவயளை ஒருதரும் திரும்பிப்பாக்கினமில்லை. அதை ஒரு கடவுள் சேவையாத்தான் செய்ய விரும்பிறதாலைதான் எலக்சன் கேக்கிறன் எண்டது போலை தான் சொன்னவராம்.

ஆனால் முதலி சொல்லுறான் ஆசையைத் துறந்திட்டன் எண்டு சொன்னாப்பிறகுதானே மஞ்சள் துணியைச் சுத்த விடுவினம். பிறகு ஏன் உவர் உந்த வேலைக்கு வாறார். அப்பிடிக் கல்முனையிலை மக்களுக்குச் சேவை செய்ய உவரைவிட ஒருத்தரும்-இல்லையோ? இதென்ன பகிடிக் கதை. சிலவேளை உவற்றை நோக்கம் வேறையோ தெரியேல்லை. ஆரேன் ஏவி விட்டும் இருக்கலாம். கல்முனைக்கு என்ன கர்மம் பிடிச்சு ஆட்டப்போகுதோ தெரியேல்லை.

இப்ப சாமிமாற்றை அட்டகாசம் கூடிப்போச்சு. ஹாமதுறு, சமய குரு, ஆயர், மௌலவி எண்டு போறவை ஒருத்தரும் அரசியலுக்கை வரவும் பிடாது, அரசியலைப் பேசவும் பிடாது எண்டு ஒரு சட்டம் உடனடியாக் கொண்டு வர வேணும். உவையள் அரசியலுக்கை வாறதாலைதான் பிரச்சினையள் பெருகிது.

மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யட்டும். சாமிமார் வேணுமெண்டால் அவைக்கு வழியைக் காட்டட்டும். சாமிமார் மக்களை ஆள வெளிக்கிட்டால் பல பிரச்சினையள் வரும். அது என்னெண்டு கேக்காதையுங்கோ. எல்லாத்தையும் வெளியிலை சொல்லேலாது. சொல்ல வெளிக்கிட்டால் பலதைச் சொல்ல வேண்டிவரும். எதைச் சொல்லுறது? எதை விடுகிறது எண்டு எங்களுக்கே குழப்பமாப் போகும்.

எனக்கு எப்பவும் உப்பிடியான விசியத்தைக் கேக்கேக்கை கிழப் பிராமணனுக்குக் கரடி பொற்காப்புக் குடுத்த கதைதான் ஞாபகத்துக்கு வரும். நாங்கள் முதலாம் வகுப்பிலை படிச்சது. அந்தக் கதை தெரியாதவை ஆரேன் பழைய ஆக்களிட்டைக் கேட்டுப் பாருங்கோ. அவை சொல்லுவினம்.

வில்லங்கம் விநாசி

## முன்னாள் நீதியரசர் பீரிஸுக்கு
# நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, ஜன. 19

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உட்பட மூன்று பேருக்கு மார்ச் 8 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதவானால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் மோசடி சம்பந்தமான வழக்கொன்றில் அவர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், தற்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ. எச்.எம்.பீ. நவாஸ் மின்சாரத் துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் எம். பி. பெர்டிணந்து ஆகிய மூவருக்கே இவ்வாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபைக்குத் தனியார் நிறுவனத்திடமிருந்து காணி ஒன்றை கொள்வனவு செய்வதில் மோசடி இடம்பெற்றுள்ளதாக இரண்டு விசாரணைக்குழுக்களின் அறிக்கைகளில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும் சம்பவத்தில் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காதிருந்தமை ஊடாக, அப்போதைய சட்ட மா அதிபராக இருந்த மொஹான் பீரிஸ் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அப்போதைய சொலிசிஸ்டர் ஜெனரலாக இருந்த ஏ.எச்.எம்.பீ. நவாஸ் ஆகியோரால் இலஞ்ச, ஊழல் சட்டத்தின் கீழ் தவறிழைக்கப்பட்டிருப்பதாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகையில் 20 சாட்சியாளர்களும், 19 சாட்சிப் பொருட்களும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் பெயரிடப்பட்டுள்ளது. (ச)

## போராட்டம் நிறுத்தம்

மின்சார சபை ஊழியர்கள் முன்னெடுத்திருந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அச்சங்கம் அறிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சின் செயலாளருடன் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து மின்சார சபை ஊழியர்கள் ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## 100 ரூபா இலஞ்சம் பெற்றவர் கைது


அம்பாறை, ஜன. 19

100 ரூபா இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கல்முனை வீதிப் போக்குவரத்து அதிகாரசபையின் பஸ் நேரப் பதிவாளர், கல்முனை பஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னால் வருகின்ற பஸ்களால் இடையூறு இன்றி தமது பஸ்களை செலுத்துவதற்கு தேவையான வசதியை செய்து தருவதற்காக அவர் இவ்வாறு இலஞ்சம் பெற்றுள்ளார். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்




# தொடர்ச்சிகள்

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியல் கட்சிகளும் ஒரேயொரு சுயேச்சைக் குழுவாகு நாங்களும் போட்டியிடுகிறோம். இந்நிலையில் ஏனைய கட்சி களின் சின்னத்தை சரியாக அச்சிட்டு தங்களின் வீட்டுச் சினத்திற்கு புள்ளடியிட்ட வாக்கு சீட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விநியோகித்துள்ளனர்.

அதில், வேண்டுமென்றே எங்களுடைய கேடயம் சின்னத்திற்கு பதிலாக வெற்றிக் கிண்ணத்தை அச்சிட்டு போலி மாதிரி வாக்குச் சீட்டை வழங்கி மக்களை குழப்பும் நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளனர். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றும் சந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார் என கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்தார். (ச)

### கூட்டமைப்பின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர். இந்தத் தேர்தலின் ஊடாக அரசைக் கவிழ்க்க முடியும் என்று கனவு கண்டுகொண்டு சிலர் போட்டியிருக்கின்றனர். சிலர் காணாமல் ஆக்கப்பட்டவர்களை முன்னிலைப்படுத்தி வாக்குக் கேட்கின்றனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு வடக்கு-கிழக்கிற்கு சமஷ்டித் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் ஒரே நோக்கத்தை அடிப்படையாக வைத்தே இந்த உள்ளுராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கியுள்ளது.

இப்போது அதிகமான திருடர்கள் உருவாகியுள்ளனர். இந்தத் திருடர்கள் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று பணம் சம்பாதிப்பதற்காகவே களமிறங்கி யுள்ளனர். இப்படியான மோசமான அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை.

இந்த தேர்தலில் வெற்றிபெறும் எமது உறுப்பினர்கள் நேர்மையானவர்களாக இருக்க வேண்டும் ஊழல், மோசடிக்கு எதிராக செயற்பட வேண்டும். ஏனைய உறுப்பினர்களுக்கு முன்னுதாரணமாக அவர்கள் இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதன் ஊடாகத்தான் நல்லதோர் அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

இந்த மோசமான அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிக்க வந்த ஜனாதிபதி அவரது ஆட்சிக்குள்ளேயே இந்தப் பிரச்சினையை இப்போது எதிர்நோக்கி வருகின்றார். இதனால்தான் உள்ளூராட்சி சபைகளில் இருந்து ஊழலற்ற அரசியல்வாதிகளை உருவாக்குவதற்கு ஜனாதிபதி முயற்சி செய்கிறார்.

அதுமாத்திரமன்றி, பிரதேச மட்டங்களில் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எவ்வாறு தீர்வை வழங்குவது என்ற திட்டம் அந்த உறுப்பினர்களிடம் இருக்க வேண்டும். மக்களுக்கு நிறைந்த சேவையை வழங்க வேண்டும். ஊழலற்ற-மக்கள்நேய சபைகளை உருவாக்கி மக்களுக்கு நிறைந்த சேவையை வழங்குவதற்காகவே ஜனாதிபதி இந்தத் தேர்தல் வெற்றியை எதிர்பார்க்கின்றார்.- என்றார்.

### இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலான தலைமையிலான படையினர் 24 இளைஞர்களை கைது செய்து கொண்டு சென்றனர். அதன் பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களில் 12 பேர் சார்பில் கடந்த நவம்பர் 9 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுக்கள் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன. சட்டத்தரணிகளான கு. குருபரன், எஸ்.சுபாசினி ஆகியோர் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்தப் 12 பேரில், 9 பேர் கடந்த 2002 ஆம் ஆண்டு யாழ்.மேல் நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுக்கள் மீதான விசாரணையை யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடாது என அப்போதைய யாழ். மாவட்ட இராணுவ தளபதி கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் 2003 ஆம் ஆண்டு தாக்கல் மனு தாக்கல் செய்திருந்தார். இதனால் அந்த வழக்குகள் அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டன.

வேறொரு மேல் நீதிமன்றில் நிலுவையில் இருக்கும் வழக்கொன்றை இன்னொரு மேல் நீதிமன்றில் மீள திறக்க முடியாது என்று சுட்டிக் காட்டிய யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், கடந்த நவம்பர் மாதம் 9ஆம் திகதி மனுத் தாக்கல் செய்த 12 பேரில் அந்த 9 பேரின் ஆட்கொணர்வு மனுக்களையும் தள்ளுபடி செய்தார்.

மேலும் புதிதாக தாக்கல் செய்த மூவரின் மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஏற்கப்பட்டு நேற்றைய தினம் விசாரணைக்காக திகதியிடப்பட்டது.

இந்த வழக்கில் முதல் எதிரியாக மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிவெலான இரண்டாவது எதிரியாக இராணுவத் தளபதி மற்றும் மூன்றாவது எதிரியாக சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதிகள் நாகரட்ணம் நிஷாந்த் மற்றும் எஸ்.பிரிந்தா ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர்.

வழக்குத்தொடுநர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு தமது வாதங்களை முன்வைத்ததுடன் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் நாவற்குழி முகாமுக்கு பொறுப்பாகவிருந்த துமிந்த கெப்பிட்டி வெலான தற்போதும் இராணுவ சேவையில் இருப்பதாக சுட்டிக்காட்டினர்.

“முதலாம் எதிர் மனுதாரரான இராணுவக் கட்டளை அதிகாரி துமிந்த கெப்பிட்டி வெலானவை வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி மன்றில் முன்னிலையாக வேண்டும்” என உத்தரவிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், மனுக்கள் மீதான விசாரணையை அன்று வரை ஒத்திவைத்தார். (ச)

### உடன் நீக்குக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி, 2017 மார்ச் 23 ஆம் திகதிகளில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை நிறுவுவதில் காணப்பட்ட முன்னேற்றம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்டத்தை அதற்குப் பதிலீடு செய்ய வேண்டும் என்ற ஐரோப்பிய ஒன்றியத்தினரின் கருத்தை இலங்கை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர். இவ்வருட இறுதியில் பிரான்ஸில் நடக்கவுள்ள அடுத்த சந்திப்புக்கு முன்பாக இலங்கை இந்த வலியுறுத்தல்களுக்கு தீர்வு கண்டிருக்க வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ச)

### மைத்திரியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படாது. அத்துடன் அரசியலமைப்பும் மாற்றப்படாது. அடுத்த முறை நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக மீண்டும் போட்டியிடுவார்.

இரண்டாவது பதவிக் காலத்துக்காகப் போட்டியிடுவதற்கு மைத்திரிபால சிறிசேனவே பொருத்தமான வேட்பாளர். அவர் அடுத்த ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட வேண்டும் எனப் பெரும்பான்மையான மக்கள் விரும்புகிறார்கள் என்றும் யாப்பா கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதியாக ஒரு தடவை மட்டுமே தான் பதவி வகிப்பேன் எனக் கடந்த தேர்தல் காலத்தில் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

### அதிர்ச்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கண்டுபிடிப்பதற்காக அன்றி, சாட்சியங்களை அடையாளம் கண்டு அழிக்கவே விசாரணைகளை நடத்தியதும் தெரியவந்துள்ளது.

அத்துடன் லசந்தவை கொலை செய்ததாக கடிதம் எழுதிவிட்டு தற்கொலை செய்துகொண்ட முன்னாள் புலனாய்வுத் துறை உறுப்பினர் ஜயமான்ன, சம்பவம் இடம்பெற்ற திகதியில் கொழும்பிலேயே இருக்கவில்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு எதிர்வரும் மார்ச் 15 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச)

### சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் மோதலில் ஈடுபட்ட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. அவர்களின் வகுப்பபுத் தடை நீக்கப்பட்ட போதும் அவர்கள் வகுப்புக்கு சமுகமளித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

### ஐ.தே.கவினருக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் படி அந்த நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய வெளிநாட்டமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தனது உரையில் தெரிவித்தார்.(ச)

# தீப்பிடித்தது பஸ் 52 பேர் கருகினர்



கஜகஸ்தான், ஜன.19

வட மேற்கு கஜகஸ்தானில் பஸ் ஒன்றில் தீப் பிடித்ததில் 52 பேர் உயிழந்தனர் என கஜகஸ்தான் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பஸ்ஸில் பயணம் செய்த 5 பேர் மட்டும், இந்த விபத்தில் உயிர் பிழைத்து இருக்கிறார்கள்.

அவர்களுக்குச் சம்பவ இடத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து கஜகஸ்தான் உள்ளூர் நேரப்படி 10.30 மணிக்கு அக்டோப் பகுதியில் உள்ள இர்கிஸ் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

உஸ்பக் குடிமக்களை ரஷ்யாவிலிருந்து ஏற்றிச் சென்றபோதே இந்த விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகின்றது. (அ)



## ட்ரம்ப் கொடுத்த போலி விருதுகள்

வோஷிங்டன், ஜன.19

போலிச் செய்திகளுக்கான விருதை 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு கொடுப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் போட்டியிட்ட நாள் முதலே அவர் தொடர்பான சர்ச்சை மிகுந்த கருத்துகள் அமெரிக்க ஊடகங்களில் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இதன் காரணமாக ஊடகங்களை ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வந்தார். அதிலும் குறிப்பாக சிஎன்என் செய்தி நிறுவனம், தி நியூயோர்க் ரைம்ஸ் ஆகியன பொய்ச் செய்தியை வெளியிட்டு வருவதாக ட்ரம்ப் பகிரங்கமாக குற்றம் சுமத்திவந்தார்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி 2ஆம் திகதி ட்ரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில், "நான் இந்த வருடத்தின் நேர்மையற்ற, ஊழல் நிறைந்த ஊடகங்களுக்கான விருதை அறிவிக்க இருக்கிறேன். இந்த விருதுகள் பொய் செய்திகள், நேர்மையற்ற, தரமற்ற செய்திகளின் அடிப்படையில் வழக்கப்படுகிறது .. தொடர்ந்து காத்திருங்கள்" என்று பதிவிட்டிருந்தார்.

தற்போது அவ்விருதுகளை அறிவித்திருக்கிறார். இந்த விருது விவரம் குடியரசு கட்சியின் அதிகாரபூர்வ இணைய பக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரபல அமெரிக்க நாளிதழான நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு போலிச் செய்திகளுக்கான விருது வழக்கப்பட்டுள்ளது.

மேலும் 'நேர்மையற்ற, பொய் செய்திகள் போன்ற இதர பிரிவுகளின் முறையே 'ஏபிசி',' சிஎன்என்', 'தி வோஷிங்டன் போஸ்ட்' போன்ற பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ட்ரம்பினால் விருது வழங்கப்பட்டுள்ள இந்தப் பத்திரிகைகள் அனைத்தும் ட்ரம்பின், குடியேற்றக் கொள்கை, முஸ்லிம் நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள், மெக்சிகோ எல்லைப்புறத்தில்கட்டப்படவுள்ள எல்லைச்சுவர்போன்றவற்றை கடுமையாக விமர்சித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மெர்சலுக்கு வந்த சோதனை

சென்னை,ஜன.19

விஜய்யின் மெர்சல் படம் சர்வதேச அளவில் சிறந்த படங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. ஐரோப்பாவில் நடைபெறவுள்ள சர்வதேச விழாவுக்கான அறிவிப்புகள் அண்மையில் வெளியானது. அதில் மெர்சலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனை ரசிகர்கள் மிகவும் கொண்டாடினர். ஆனால் இதற்கு வாக்கெடுப்பு முறையிலேயே விருது தீர்மானிக்கப்படும்.

இதனால் ரசிகர்கள் பலரும் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்து வருகின்றனர். இந் நிலையில் தற்போது அந்தத் தளத்தை வைரஸ் தாக்கியுள்ளதாம். இதனால் அதில் வாக்களிக்க வருவோருக்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாம். இதனால் ரசிகர்கள் மத்தியில் குழப்பம் எழுந்துள்ளது. (அ)

## 38 பில்லியன் டொலர் அப்பிளுக்கு வரி

வோஷிங்டன், ஜன19

அமெரிக்க வரிச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட மாறுதல்களை அடுத்து அப்பிள் நிறுவனம் ஏறத்தாழ 38 பில்லியன் டொலர் வரியை அமெரிக்காவுக்கு செலுத்த இருக்கிறது. வெளிநாட்டில் முதலீடு செய்யும் அமெரிக்க நிறுவனங்களை உள்நாட்டில் முதலீடு செய்ய வைக்க வரி விதிப்பில் சில மாறுதல்களை அமெரிக்கா கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக அப்பிள் இவ்வளவு அதிகமான வரியைச் செலுத்த நேரிட்டுள்ளது. அந்த நிறுவனம் அமெரிக்காவில் முதலீடு செய்ய திட்டமிட்டு இருப்பதாகவும், இதன் காரணமாக புதிதாக 20,000 அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் கூறி உள்ளது. (அ)

## ஊக்கக் குழுவை அனுப்பும் வடகொரியா

சியோல், ஜன.19

தென் கொரியாவில் நடைபெறும் குளிர் கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் தங்கள் நாட்டு வீரர்களை உற்சாகமூட்ட ஊக்கமளிக்கும் குழுவை வடகொரியா அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து வடகொரியா அதிகாரிகள் தரப்பில், "தென்கொரியாவில் வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் எங்கள் நாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கவும், உற்சாகப்படுத்தவும் 230 பேரை கொண்ட குழுவை அனுப்பத் திட்டமிட்டுள்ளோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தென்கொரியா, வடகொரியா இடையே போர் பதற்றம் நிலவி வந்த சூழலில் தென்கொரியாவில் நடைபெறும் குளிர் கால ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க வடகொரிய அதிபர் விருப்பம் தெரிவித்தார்.

இந்த நிலையில் இது தொடர்பாக தென் கொரியா - வடகொரிய்ா பிரதிநிதிகள் பங்கேற்கும் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. இதன் முடிவில் வடகொரியா குளிர் கால ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது. (அ)

## கொலையைக் காட்டிக் கொடுத்த 'செல்ஃபி'

ரொராண்டோ,ஜன.19

கொலையை கண்டுபிடிக்க பொலிஸூக்கு ஒரு செல்ஃபி புகைப்படம் உதவியது என்றால் நம்பமுடிகிறதா?

கனடாவில் 2 ஆண்டுகளுக்கு முன் பிரிட்னி. என்ற பெண் கொலை செய்யப்பட்டார். அவரது உடல் சாஸ்கடோன் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. இதுகுறித்து பொலிஸார் விசாரணை நடத்திய நிலையில் குற்றவாளி யார் என்பது தெரியாமல் இருந்தது. ஆனால் பிரிட்னியின் உடல் அருகே பெல்ட் ஒன்று கிடந்தது. இதை முக்கிய ஆதாரமாகக் கருதிய பொலிஸார் விசாரணையைத் தீவிரப்படுத்தினர்.



இதற்கிடையே பிரிட்னி கழுத்தை நெறித்து கொலை செய்யப்பட்டதும் பிரேத பரிசோதனையில் தெரியவந்தது. பொலிஸூக்கு பிரிட்னியின் தோழியான அண்டனி மீது சந்தேகம் இருந்தது. இந்த நிலையில் அண்டனியின் பேஸ்புக் பக்கத்தை பொலிஸார் ஆராய்ந்த போது, பிரிட்னி கொல்லப்படுவதற்கு முன்பாக இருவரும் செல்பி எடுத்த புகைப்படம் இருந்தது. அதில் அண்டனி அணிந்திருந்த பெல்ட்டும், கொலை செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட பெல்ட்டும் ஒரே மாதிரி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன்பின்னர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்ட அண்டனி, மது போதையில் இருவருக்கும் வாக்குவாதம் நடந்ததால் ஆத்திரத்தில் பிரிட்னியைக் கொன்றதாக தெரிவித்துள்ளார். அண்டனிக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (அ)

## நடுவானில் பிரசவம்

நியூயோர்க், ஜன.19

30 ஆயிரம் அடி உயரத்தில் பெண் ஒருவருக்குப் பிரசவம் நிகழ்ந்துள்ளது.

பரிஸிலிருந்து நியூயோர்க் நோக்கிப் பறந்து கொண்டிருந்த 'எயார் பிரான்ஸ்' விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்த 41 வயரொய்ன் ஒகிண்டீப் என்ற பெண்ணுக்கு திடீரென்று பிரசவ வலி ஏற்பட்டது. மருத்துவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விமானப் பணிப்பெண்கள் கேட்க, கையை உயர்த்தியபடி எழுந்தவர் ஒரு ஆண் மருத்துவர்.

பணிப்பெண்கள் தயங்கியவாறு நிலைமையை விவரிக்க, தனது பயிற்சிக் காலத்தில் ஏழு பெண்களுக்குப் பிரசவம் பார்த்த அனுபவம் தந்த நம்பிக்கையில் அவர் உடனடியாக உதவ முன்வந்தார். யார் செய்த புண்ணியமோ அவருக்கு அடுத்த இருக்கையில் இருந்தவர் ஒரு குழந்தைகள் நல மருத்துவர்.

அந்தப்பெண்ணை எப்படியாவது பத்திரமாக விமான நிலையத்திலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிடலாம் என்று நினைத்தால் அதற்கு இன்னும் இரண்டு மணி நேரங்களாகும். எனவே விமானத்தில் இருந்த சொற்ப மருத்துவக் கருவிகளுடன், குழந்தைகள் நல மருத்துவரின் உதவியுடன் மற்றைய மருத்துவர் செயலில் இறங்கினார்.

30 நிமிடங்களுக்குப் பிறகு விமானத்தில் 'குவா குவா' சத்தம் ஒலித்தது. விமானம் தரையிறங்கியதும் தாயும் சேயும் பத்திரமாக மருத்துமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ளும்படி எனக்குப் பயிற்சி அளித்த Cleveland Clinikகுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்று Dr Sij Hemal கூறுகிறார். நடுவானில் பிறந்த குழந்தைக்கு அதன் தாய் 'ஜாக்' என்று பெயரிட்டுள்ளார். அமெரிக்கப் பகுதியில் பிறந்ததால் 'ஜாக்குக்கு' அமெரிக்க பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது. (அ)



# வெளியேற்றம்!



மெல்பேர்ண், ஜன. 19

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் முகுருஜா 2ஆவது சுற்று ஆட்டத்தில் அதிர்ச்சிகரமாகத் தோற்று வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டியில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்ணில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்றுக் காலை நடந்த பெண்கள் 2ஆவது சுற்று ஆட்டத்தில் 3ஆம் நிலை வீராங்கனையான முகுருஜா (ஸ்பெயின்) சீனத் தைபேயைச் சேர்ந்த சுவியை எதிர்கொண்டார். இதில் சுவி 7:6, 6:4 என்ற புள்ளிக் கணக்கில் முகுருஜாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

21ஆம் நிலை வீராங்கனையான கெர்பர் (ஜேர்மனி) 6:4, 6:1 என்ற புள்ளிக் கணக்கில் குரோஷியாவைச் சேர்ந்த வேக்கியைத் தோற்கடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில் மரியா ஷரபோவா (ரஷ்யா) 6:1, 7:6 என்ற புள்ளிக் கணக்கில் சுவெஸ்டாவை (லாத்வியா) வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஏனைய ஆட்டங்களில் 6ஆம் நிலை வீராங்கனையான பிளிஸ்கோவா, சபரோவா (செக் குடியரசு) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஆண்களுக்கான ஆட்டத்தில் உலகின் 19ஆம் நிலை வீரரான தோமஸ் பெர்டிச் (செக்குடியரசு) 6:3, 2:6, 6:2, 6:3 என்ற புள்ளிக் கணக்கில் கார்சியா லோபை (ஸ்பெயின்) வீழ்த்தினார். (ஐ)

# 2017இன் நாயகன் கோஹ்லி



டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 கிரிக்கெட்டில் கடந்த ஆண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய விராட் கோஹ்லி சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐ.சி.சியால் ஆண்டு தோறும் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 2017ஆம் ஆண்டுக்கான விருதுகளை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இதில் சிறந்த ஒரு நாள் கிரிக்கெட் வீரராக இந்திய அணியின் அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, 2017ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருதையும் விராட் கோஹ்லி பெற்றுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறந்த வீரராக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வளர்ந்து வரும் வீரருக்கான விருதை பாகிஸ்தான் பந்துவீச்சாளர் ஹசன் பெற்றுள்ளார். ஐ.சி.சி. உறுப்பு நாடுகளைச் சேர்ந்த அணிகளில் சிறந்த வீரருக்கான விருது ஆப்கானிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் ரஷீத் கானுக்குக் கிடைத்துள்ளது.

சிறந்த நடுவருக்கான டேவிட் ஷெப்பர்ட் விருது மைரஸ் எராஸ்மஸ்க்குக் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வீரருக்கான ஐ.சி.சி. விருதை பெற்றவர்கள் வருமாறு:-

2004: ராகுல் டிராவிட் (இந்தியா)
2005: பிளின்ரொப் (இங்கிலாந்து), கலிஸ் (தென்னாபிரிக்கா).
2006: ரிக்கி பொண்டிங் (அவுஸ்திரேலியா)
2007: பொண்டிங் (அவுஸ்திரேலியா)
2008: சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள்)
2009: ஜோன்சன் (அவுஸ்திரேலியா)
2010: டெண்டுல்கர் (இந்தியா)
2011: ஜோனாதன் டிராட் (இங்கிலாந்து)
2012: சங்கக்கார (இலங்கை)
2013: கிளார்க் (அவுஸ்திரேலியா)
2014: ஜோன்சன் (அவுஸ்திரேலியா)
2015: ஸ்டீவ் சுமித் (அவுஸ்திரேலியா)
2016: அஸ்வின் (இந்தியா)

# இன்று ஆடுவது சந்தேகம்



இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ், இன்று நடைபெற உள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பங்களாதேஷில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் சிம்பாப்வே அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் மத்யூஸ் பந்து வீசவில்லை. மேலும், துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அவர் மிகவும் சிரமப்பட்டார்.

நேற்று வரை அஞ்சலோ மத்யூஸ் விளையாடுவதற்கான உடல்நிலையுடன் உள்ளாரா என்பது தெரியவில்லை. எனவே, இன்று நடக்க உள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (ஐ)

# இலங்கையுடன் விளையாடியது வீண்

"தென்னாபிரிக்காவுடனான தொடரில் இந்தியா படுதோல்வி அடைந்தது எதிர்பார்த்த ஒன்று தான். ஆனாலும், அந்தத் தொடருக்கான தயார்ப்படுத்தல்களை விடுத்து, இலங்கையுடன் விளையாடி நேரத்தை வீணடித்துவிட்டனர்" என இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் பிஷன் சிங் பேடி கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவுடனான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 2:0 என்ற கணக்கில் இந்தியா தோல்வியடைந்து தொடரை இழந்துள்ளது.

இதுகுறித்துக் கருத்து தெரிவித்தபோதே பிஷன் சிங் பேடி மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"இந்திய அணி, தென்னாபிரிக்கத் தொடருக்கு முழுமையாகத் தயாராகியிருக்கவில்லை, இலங்கை அணியுடன் இந்தியா பங்கெற்ற டெஸ்ட் தொடர், இந்திய வீரர்களின் நேரத்தைத்தான் வீணடித்தது. தென்னாபிரிக்கா போன்ற வலுவான அணியை எதிர்கொள்ளத் தயாராகாமல் பலவீனமான இலங்கையுடன் ஒன்றறை மாதமாக தொடரில் பங்கேற்றது தவறானது.



இந்தியா, இலங்கை மண்ணில் இலங்கையை வீழ்த்திய பின்பு அவர்களை மீண்டும் இந்தியா அழைத்து தொடரில் பங்கேற்றது ஏன் எனப் புரியவில்லை. தற்போதைய சூழலில் இந்தியா உள்நாட்டுப் போட்டியில் கவனம் செலுத்த வேண்டுமா? அல்லது வெளிநாட்டுப் போட்டிகளில் கவனம் செலுத்த வேண்டுமா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

ஊடகவியலாளராக ஆசையா?



தகுதிகள்:
- தமிழில் ஓரளவு தேர்ச்சி
- ஊடகத்துறையில் ஆர்வம்
- முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ethirolimedia@gmail.com
021 224 38 18
021 300 48 48

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 19.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.